ஓம்

சிவமயம்

தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரை

(மறைபொருள் தத்துவ விளக்கம்)



ஆசிரியர் :

பொன். கோவிந்தசுவாமி

1977

அடக்க விலை ரூ. 1—00

அன்பளிப்பு
கோவிலூர் ஆதீனம்
நூல் நிலையம்

ஓம்

சிவமயம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரை

(குமரன் அவதாரம்)

பிரம்மஞான ஒளியில் சின்முத்திரையின் மறைபொருள் தத்துவ விளக்கம்

ஆக்கம் :

திரு. பொன். கோவிந்தசுவாமி

(ஓய்வுபெற்ற பள்ளி வித்தியாதரிசி, மலேசியா)

ஆசிரியர்,

பிரம்மஞான ஒளியில் சிவஞான போதம் மறைபொருள் விளக்கம்

&

திருச்சிற்றம்பலம் என்ற அவனியின் அந்தரங்க அருளரசு

1977

முதற் பதிப்பு : மே, 1977



திரு. பொன். கோவிந்தசுவாமி
தலைவர், சமரச சுத்த சன்மார்க்க சங்கம்
16-B, தெற்குக் கவரைத் தெரு
மஞ்சகுப்பம், கடலூர்-1, தென்னாற்காடு

அடக்க விலைப் பதிப்பு விலை ரூ. 1—00

முருகன் அச்சகம்,
இராயப்பேட்டை, சென்னை-14

உ

OM

The Occult TRUTH of
DHAKSHANAMURTHY'S CHIN - MUDHRA
(Wisdom Symbol)
Advent of Sanat Kumara to this Earth as The KING of Tbe Inner Government of the World and The HEAD of The Occult Hierarchy In The Light of Theosophy



By

P. Govindaswamy

(Retired Inspeetor of Schools, Malaysia)

Author of

Esoteric meaning of Sivagnana Bodham

&

Cccult Hierarchy and the Inner Government of The World In the light of Theosophy

1977

பிரம்மஞான சங்கத் தலைவர்கள்



சித்புருஷி ஞான யோகினி
H. P. பிளவட்ஸ்கி அம்மையார்



சிவராஜயோகி
பிஷப் C. W. லேட் பீட்டர்



கர்மயோகினி
அன்னிபெஸண்ட் அம்மையார்

முக்கண் படைத்த மும்மூர்த்திகள்

உ

கடவுள் வாழ்த்து

கணபதி துதி

திருவும், கல்வியும், சீரும், சிறப்பும் உன்
திருவடிப் புகழ்பாடும் திறமும் நல்
உருவும், சீலமும், ஊக்கமும், தாழ்வுறு
உணர்வும் தந்து எனதுள்ளத்து அமர்ந்தவா
குருவும் தெய்வமும் ஆகி அன்பாளர்தம்
குறைதவிர்க்கும் குணப்பெருங் குன்றமே
வெருவும் சிந்தைவிலகக் கஜானனம்
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே. —(திருஅருட்பா)

முருகன் துதி

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலேதெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே அரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரமஞானம்
வீறுமுகப் பெருங்குணத்தோரிதயத் தோங்கும்
விளக்கமே யானந்த வெள்ளமே முன்
றேறுமுகப் பெரியவருட் குருவாயென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவதேவே.

—(திருஅருட்பா)

பரசிவ வணக்கம்

திருவிளங்கச் சிவயோகச் சித்தியெலாம் விளங்கச்
சிவஞான நிலைவிளங்கச் சிவானுபவம் விளங்கத்
தெருவிளங்கு திருத்தில்லைத் திருச்சிற்றம்பலத்தே
திருக்கூத்து விளங்க வொளிசிறந்த திருவிளக்கே!
உருவிளங்க வுயிர்விளங்க வுணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருளுதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்தொருபால் விளங்க
வயங்குமணிப் பொதுவிளங்க வளர்ந்தசிவக் கொழுந்தே.

—(திருஅருட்பா)

அன்பெனும் பிடியுளகப் படுமலையே
அன்பெனுங் குடில்புகுமரசே
அன்பெனும் வலைக்குட்படு பரம்பொருளே
அன்பெனும் கரத்தமரமுதே
அன்பெனுங் கடத்துளடங்கிடுங் கடலே
அன்பெனு முயிரொளி ரறிவே
அன்பெனு மணுவு ளமைந்தபே ரொளியே
அன்புருவாம் பரசிவமே. —(திருஅருட்பா)

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலர்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே. —(திருமந்திரம்)

பராசக்தி வணக்கம்

பன்னும் பல்வேறு அண்டமெல்லாம், அவ்வண்டப் பரப்பினின்று
துன்னும் சராசரம் யாவையும் ஈன்று அது சூழ்ந்தும் உன்னை
இன்னும் இளந்தை அழியாத கன்னிகை யென்பது என்னே?
மின்னும் சுகாகந்த வாழ்வே வடிவுடை மாணிக்கமே!
—(திருஅருட்பா)

குருநாதர் துதி

தந்தை தாய்ஆவானும், சார்கதி யிங்காவானும்
அந்தமிலா இன்பம் நமக்கு ஆவானும், எந்தம்உயிர்
தானுருவானும், சான் ஆகுவானும், அருள்
கோன் ஆகுவானும் குரு. —(திருமந்திரம்)

நூன்முகம்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. —(குறள்)

ஓர் அறிவு முதல் ஐயறிவு வரையிலுமான உயிர்கள் எல்லாவற்றிற்கும் மெய், வாய், கண், மூக்கு, செவியென்ற புறக்கரணங்களாகிய ஞானேந்திரியங்கள் ஐந்தினுலும் அறியும் அறிவும், அனுபவிக்கும் அனுபவங்களும் பொதுவானவை. மனிதன் ஒருவனுக்கே அவ்வைந்தறிவு அனுபவங்களோடு ஆருவதாகிய பகுத்தறியும் அறிவிற்கான கருவி ஒன்றுளது. அதுதான் மனம் என்ற அந்தக்கரணமாகும். அதைக் கொண்டு மனிதன் சிந்தித்து ஆராய்ந்து அநேக நூதன அனுபவங்களை யடைகின்ருன். மனம் என்ற சொல் "நினைத்தல்" என்ற "மன்" எனும் பகுதியினடியாகப் பிறந்த பதமாகும். அந்தப் பகுத்தறியும் மனத்தையுடையவனே மனிதனுவான்.

அந்தப் பகுத்தறிவைக் கொண்டு மனிதன் அடையும் முதல் அனுபவம் தன்னைச் சுற்றியுள்ள உலகில் அறிவுடை சித்துப் பொருள், அறிவில் அசித்து (ஜட)ப் பொருள் அதாவது உடல் உயிர் பொருட்களாகக் காண்பதேயாகும். அப்படிப் பார்க்கும் போது உடலில் பலதிறப்பட்ட வடிவங்களையும், உருவங்களையும் காண்பது போன்று உயிரிலும் பலதிறப்பட்ட, பல நிலைகளிலுள்ள அறிவைக் காண்கின்ருன். காட்டுமிராண்டி (Savages) முதல் பெரிய விஞ்ஞானி (Scientist) வரையிலான மக்களிடை இருக்கப் பட்ட அறிவின் வித்தியாசங்களைக் காண்கின்ருன்.

அதே பகுத்தறியும் அறிவின் அளவை நீட்டிப் பார்க்கும் போது சாதாரண மக்கள் அறிவிற்கும் ஆற்றலுக்கும் மேம்பட்ட அறிவும் ஆற்றலும் படைத்த மனிதர்கள் இருக்கவேண்டுமென்று ஊகித்தறிகின்ருன். இந்த அனுமானப் பிரமாணம் சாத்திரப் பிரமாணங்களால் ஊர்ஜிதப்படுகிறது. இந்த ஆழ்ந்தகன்ற நுண்ணிய ஆராய்ச்சியின்போது அவனுக்குத் திடீரென்று ஓர் உள்ளுணர்வு (Intuition) ஒளி ஏற்பட்டு எல்லாவற்றையும் தன் பிரத்தியட்ச அனுபவ வாயிலாகக் காண்கின்ருன்.

அப்படி, மனித அறிவிற்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட பேரறிவையும், பேராற்றலையும் பெற்றவர்களை ஞானிகள், முனிவர்கள், மகரிஷிகளென்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. இப்படிப்பட்ட இனத்திற்கே திருக்கூட்டம், திருச்சிற்றம்பலம் (திரு+சித் +அம்பலம்=தெய்வீக ஞானப் பேரவை) (Occult Hierarchy) என்று இதிகாச புராணங்களில் கூறப்பட்டுள்ளன. ஐந்தொழில் ஆற்றல் பெற்ற இத்திருக்கூட்டமே இறைவன் ஆணைப்படி. இவ்வுலகை பரிபாலனம் செய்துகொண்டு வருகிறது. இதற்கு அந்தரங்க அருளரசு (Inner Government of the world by the Occult Hierarchy) எனப் பெயர். இதற்குத் தலைவர் குமாரக் கடவுளாவர்.

உலக மக்களுக்கு வழிகாட்டியாக இத் திருச்சிற்றம்பல மகரிஷிகள் அருளிய நூல்களே வேதாகம சாத்திரங்களாகும். அவைகள் மக்களின் பக்குவ நிலைக்குத் தக்கவாறு இதிகாச புராணங்கள் போன்று பகிர்முகமாகவும், குழூக்குறிகள், பரிபாஷைகள், சின்னங்கள், குறிகள் போன்று அந்தர் (மறை)முகமாகவும் அமைந்துள்ளன. இவ்வாறுன வழிகாட்டிக் குறிகளில் ஒன்றே தக்ஷிணமூர்த்தியின் சின் முத்திரைக் குறியாகும். சின் (சித்) முத்திரை என்றுல் ஞானக்குறி என்ற பொருள். இதில் அடங்கியுள்ள மறைபொருள் தத்துவங்கள் அநேகம். அவற்றிற்கெல்லாம் ஞானதிட்சாப் படிகளில் ஏழு திறவுகோல் இருப்பதாக அறிந்தோர் அறிவிக்கின்றனர்.

பிரம்மஞான ஒளிகொண்டு (In the light of Theosophy) இந்த தக்ஷிணமூர்த்தியின் சின் முத்திரையைப் பற்றி நான் அறிந்த சில மறை பொருள் விளக்கங்களை நான் எனது "பிரமஞான ஒளியில் சிவஞானபோத மறை பொருள் விளக்கம்" என்ற நூலில் பின் இணைப்பாகக் கொடுத்துள்ளேன். அந்த நூலைப் படித்த பல சித்தாந்த நேய அன்பர்கள் என்னைப் பாராட்டி எழுதிய கடிதங்களில் இச்சின் முத்திரையைப் பற்றி மேற்கொண்டும் ஏதாவது மறைபொருள் தத்துவங்கள் இருக்குமாயின் அவற்றையெல்லாம் திரட்டி ஒரு சிறு நூலாக வெளியிட்டால் நலமென எழுதியிருந்தனர்.

அதற்காக பிரம்மஞான சங்க நூல்களை (Theosophical Literatures) முக்கியமாக பிரம்மஞான சங்கப் பிரமுகர்களில் ஒருவராகிய வழக்கறிஞர் இராஜயோகி ஸ்ரீ T. சுப்பராவ் அவர்கள் எழுதிய இராசி மண்டலத்தின் பன்னிரண்டு குறிகள் (The Twelve Signs of the Zodiac) என்ற நூலையும், ஸ்ரீ எர்னஸ்ட் வுட் எழுதிய ஏழு கதிரொளிகள் (The Seven Rays) முதலான நூல்களையும், மற்றும் சில ஜோதிட நூல்களையும் ஆராய்ந்தபோது அவற்றில் அநேக அரிய பெரிய மறைபொருள் தத்துவங்கள் பொதிந்து கிடப்பது புலனாயின. அவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டே இந்நூலை எழுதலானேன்.

வேதாகமங்களிலுள்ள பல விளக்கமுறு பொருள்களின் அந்தரார்த்தக் கருத்துக்களை ஞானக் கண்கொண்டு விளக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த ஞானிகள் மெய்கண்டாருக்குப் பிறகு தமிழகத்தில் யாரும் தோன்றிலர். எனவே சாத்திரங்களிலுள்ள பல மறைபொருள் தத்துவங்கள் மறக்கப்பட்டு மறைந்து போயின. பணத்திற்காகப் பட்டங்களைப் பெற சாத்திரங்களை ஆராயும் புலவர்களும் சித்தாந்திகளும் தங்கள் மனம் போன போக்கில் இதற்கு விளக்கங்கூற முற்பட்டுவிட்டனர். உதாரணமாக திருச்சிற்றம்பலம் என்பதற்கு சிறு அம்பலம் என்றும் அது இருதயத்திலுள்ள சிறிய வெளியென்றும் சில சித்தாந்தப் புலவர்கள் பொருள் கூறக் கேட்டிருக்கின்றேன். அவ்வாறே இச் சின் முத்திரைக்கும் ஆண்டான் அடிமை என்ற கருத்துப்பட பசு பாசத்தைவிட்டு பதியின் அடியைச் சேருவது என்றும், சின்முத்திரை பொடிபோடும் குறி யென்றும் மேடையில் பேசக் கேட்டிருக்கின்றேன். இக்குறிகளிலுள்ள ஆழ்ந்தகன்ற நுண்ணிய மறைபொருள் கருத்துக்களை அறிய ஆற்றலற்றவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்.

திருச்சிற்றம்பலத்து மகரிஷிகளின் சீடர்களாகிய பிரம்மஞான சங்கத் தலைவர்கள் [ஞானயோகினி சித்புருஷி பிளவட்ஸ்கி அம்மையார், கர்மயோகினி அன்னிபெஸன்ட் (அன்னை வஸந்தை) அம்மையார், இராஜயோகி பிஷப் லெட்பீட்டர் அவர்கள்] ஞான தீட்சை பெற்ற திவ்ய திருஷ்டியுடைய சாத்தியர்கள். தத்துவரூபம், தத்துவசுத்தி, தத்துவதரிசனம், ஆன்மரூபம், ஆன்மசுத்தி, ஆன்மதரிசனம் கண்ட அனுபவசாலி

கள். அவர்கள் தாங்கள் அடைந்த பிரத்தியட்ச ஞானுனுபவங் களைப் பல நூல்களாக வடித்துக் கொடுத்துள்ளனர். அவற்றின் அடிப்படையில்தான் இந்நூல் உருவாயிற்று. ஆன்மீகத்தில் ஆர்வமுள்ளவர்கள் காய்தல் உவத்தலின்றி நடுநிலை நின்று இதை ஆய்ந்து பயனடைவார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்நூலை வெளி யிடுகின்றேன்.

இதற்கான இரேகைப் படங்களை வரைந்தளித்துதவிய கைரேகை நிபுணர் கடலூர் திரு. முருகனடியார்க்கு எமது நன்றி உரித்தாகுக.

மற்றும் இந்நூலைப் பிழை திருத்தி, நல்ல முறையில், விரை வில் அச்சிட்டுதவிய முருகன் அச்சக உரிமையாளர் இராயப் பேட்டை திரு. மு. நாராயணசாமி முதலியாருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

எல்லாம் செயல்கூடும் என்ஆணை, அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையேயேத்து.

இன்றுவருமோ நாளைக்கே வருமோ அல்லதுமற்று
என்றுவருமோ அறியேன் எம்கோவே—துன்றுமல
வெம்மாயை யற்று வெளிககுள் வெளிகடந்து
சும்மா யிருக்கும் சுகம்.

—(வள்ளலார்)

16-B, தெற்கு கவரைத் தெரு
மஞ்சகுப்பம், கடலூர் - 607001
15-10-1976

திரு. பொன். கோவிந்தசுவாமி
வள்ளலார் அடிமை

தோற்றுவாய்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. —(குறள்)

இவ்வுலகிலுள்ள சராசரப் பொருட்கள் அனைத்தும் தோன்றி. நின்று, மறைவதையும் அண்டாண்டப் பிரபஞ்சங்களிலுள்ள சூரியாதி கிரகங்கள் அந்தரத்தில் நிலைபெற்று பம்பரம் போன்று தன்னில் தானே சுழன்று கொண்டும், பிற கிரகங்களை ஒரு ஒழுங்கில் சுற்றிக்கொண்டு வருவதையும் அணு முதல் அண்டங்கள் வரை ஒரு நியதியின் கீழ் இயங்கிக்கொண்டிருப்பதையும் காண்கின்றோம். இம்மகத்தான காரியங்கள் பேராற்றல் பெற்ற ஏதோ ஓர் சக்தியால் இயக்கப் பெறல் வேண்டுமென்பதையும் ஊகித்துணர்கின்றோம். அப்பேராற்றல் பெற்ற சக்தியைத்தான் "கடவுள்" என்று எல்லா சமய மக்களும் போற்றிப் புகழ்ந்து, துதித்து வழிபடுகின்றனர். கடவுள் என்றால் இப்பிரபஞ்சங்களையெல்லாம் கடந்தும் (Transcendent), உள்ளிட்டும் (Immenent) வியாபித்திருக்கும் ஒரு பரம்பொருள் என்பதாகும்.

கடவுள் பிரபஞ்சத்தை எவ்வாறு படைக்கின்றார்? குலாலனைப் போலவா அல்லது சிலந்தியைப் போன்றா? குலாலன் வெளியிலிருந்து கொண்டு வெளியிலுள்ள பொருளைக் கொண்டு பாண்டங்களை வனைகின்றான். சிலந்தியோ உள்ளிருந்தே தன்னுள்ளிருந்து வரும் நூலைக்கொண்டு வலையைக் கட்டுகின்றது. கடவுள் பிரபஞ்சத்தை எவ்வாறு சிருட்டிக்கின்றான் என்பதைப் பற்றி வேதாகம புராண இதிகாசங்களில் பல உவமானங்களால் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. விளக்கத்தை எனது "சிவ ஞானபோதம் மறைபொருள் விளக்கம்'' என்ற நூலில் காண்கவும்.

இவ்வாறு தோன்றி நின்று மறையும் பொருட்களின் தன்மைகள் என்ன? அவை நித்தியப் பொருட்களா; அநித்தியப் பொருட்களா? என்ற வினக்கட்கு சாத்திரங்கள் எல்லாப் பொருட்களையும் பதி, பசு, பாசம் என்ற மூன்றில் அடக்கி இம்மூன்றுமே அநாதி நித்தியப் பொருட்களெனக் கூறுகின்றன. இவற்றில் பசுவும், பாசமும் பலவெனவும், பதி மட்டில் ஒன்றே எனவும் பொதுவாகக் கருதப்படுகிறது. இது ஒரு தவறான கருத்தாகும்,

பசுவில் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என மூப் பிரிவுகள் உள. அவற்றில் சகலரில் சாமுசித்தர் (உத்தமர்), வைநயிகர் (மத்தியர்), பிராகிரதர் (அதமர்) என்ற முப்பிரிவு களும், இவைகள் ஒவ்வொன்றிலும் எண்ணிறந்த பலதரப்பட்ட பல நிலைகளிலுள்ள பசுக்கள் உளவெனவும் கூறுகின்றன. தாவர விலங்குகளும் பசுக்களே. உண்மையில் அணுவும் ஒரு பசுவே "பச்" என்றால் தளை. தளையால் கட்டுப்பட்டவை கள் எல்லாம் பசுக்களே.

அவ்வாறே பாசத்திலும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று பிரிவுகள் உள. அவற்றுள் ஆணவத்தில் ஆசை, அகங் காரம், மமகாரம் என்ற மூன்று பிரிவுகளும், கன்மத்தில் சஞ்சிதம், பிராரத்துவம், ஆகாமியம் என்ற மூன்று பிரிவுகளும், மாயையில் சுத்தமாயை, அசுத்தமாயை, சுத்தாசுத்தமாயை என்ற மூன்று பிரிவுகளும் இவற்றால் உண்டான மாயேயங்கள் எண்ணிறந்தன வெனவும் சாத்திரங்கள் கூறுகின்றன.

அவ்வாறே பதி ஒன்றோடு நின்று விடவில்லை. பலதரப் பட்ட, பல நிலைகளிலுள்ள எண்ணிறந்த பதிகள் உள. பதி என்றால் தலைவன். பிரபஞ்சத்தில் (Cosmos) எண்ணிறந்த அண் டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு அண்டத்திற்கும ஒரு பதி உண்டு. ஒவ்வொரு அண்டத்திலும் பல உலகங்கள் உள. ஒவ்வொரு உலகத்திற்கும் ஒரு பதியுண்டு.

இரௌரவம், மிருகேந்திரம் முதலிய இரண்டொரு ஆகமங் கள் அநாதி நித்தியப்பொருள் பதி, பசு, பாசம் என்ற மூன்றோடு நிறுத்திக்கொண்டன. பௌஷ்கரம் முதலிய மற்ற ஆகமங்களில் நான்கு முதல் ஏழு வரையிலான அநாதி நித்தியப் பொருள்கள் உளவெனக் கூறுகின்றன. அவையாவன :—சிவம், பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்ற ஏழாகும். கடை நான்கும் பாசத்தில் அடங்கி விடுமாதலால் சிவம், பதி, பசு, பாசம் என்ற நான்குமே அநாதி நித்தியப் பொருளாம். அவற்றுள்ளும் பதி, பசு, பாசம் என்ற மூன்றும் சிவத்தின் தோற்றமாதலால் சிவம் (பிரம்மம்) ஒன்றே அநாதி நித்தியப் பொருளாகும். விரிக்கின் பெருகும். விரிவையும் விளக்கத்தையும் திருவருட்பிரகாசரின திருவருட்பாவில் காண்க.

நமது சூரியாண்டம் சம்பந்தப்பட்ட வரையில் ஸ்ரீகண்ட பரமேஸ்வரரே இதற்கு பதியாகும். நமது உலகிற்கு பதி குமாரக் கடவுளாகும். மனிதன் ஆயிரம் அஸ்வமேத யாகங்கள் செய்தால் இந்திரன் ஆகலாம். இந்திரன் ஆயிரம் அஸ்வமேத யாகங்கள் செய்தால் பிரம்மாவாகலாம். அவ்வாறே பிரம்மா விஷ்ணுவாகவும், விஷ்ணு உருத்திரனாகவும், உருத்திரன் மகேஸ்வரனாகவும், மகேஸ்வரன் சதாசிவனாகவும் இப்படியே பதவிகள் உயர்ந்து கொண்டே போகலாம் என்று சாத்திரங்கள் கூறுகின்றன. உயிர் வளர்ச்சிக்கு எல்லை இல்லை.

இறைவன் உயிர்கள் உய்வதற்கான பஞ்சகிருத்தியங்களைத் தேவர்களையும், மகரிஷிகளையும் அதிட்டித்து நின்று அவர்கள் மூலம் செய்விக்கின்றான். தேவர்கள் உடல் வளர்ச்சியையும், மகரிஷிகள் உயிர் வளர்ச்சியையும் கவனித்துக்கொள்கின்றனர். இம்மகரிஷிகளின் திருக்கூட்டத்திற்கே திருச்சிற்றம்பலம், சிற்சபை, சிதம்பரம் என்ற பெயர்கள். இத்திருக்கூட்டமே (Occult Hierarchy) இவ்வுலகின் அந்தரங்க அருளரசாட்சி (Inner Government of the world) யாகும். இதற்குத் தலைவர் குமாரக் கடவுளாகும். இந்த அந்தரங்க அரசில் பதவி வகிக்கும் மகரிஷிகளுக்கு ஐந்தொழில் ஆற்றலுண்டு; இவர்கள் பல படிகளிலும், பதவிகளிலும் உள்ளனர். இந்த அந்தரங்க அருளாட்சியாகிய திருச்சிற்றம்பலத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒன்று முதல் பத்து வரையிலான ஞான தீட்சை, நிர்வாண தீட்சைகள் பெற்றவர்களாக இருக்கவேண்டும். இத் தீட்சைகள் எல்லாம் இறைவனாலேயே கொடுக்கப்பெறுகின்றன.

தீட்சா படிகளும் பதவிகளும்

முதல் ஞான தீட்சை	=	பரிவிராசகன்
இரண்டாவது ஞான தீட்சை	=	குடீசகன்
மூன்றாவது ஞான தீட்சை	=	பகூதகன்
நான்காவது ஞான தீட்சை	=	ஹம்ஸன்
ஐந்தாவது ஞான தீட்சை	=	பரமஹம்ஸன் (முனிவர்கள் + ரிஷிகள்) ஜீவன் முக்தர்கள்
ஆறாவது நிர்வாண தீட்சை	=	மாமுனிவர்கள் + மகரிஷிகள்

ஏழாவது நிர்வாண தீட்சை	=	ஐந்தொழில் ஆற்றல் பெற்ற பிரம்மரிஷிகள் (மனு, வியாசர், அகத்தியர்)
எட்டாவது நிர்வாண தீட்சை	=	புத்தர் + குமரர்கள் (சனகர் சனந்தனர், சனதனர்)
ஒன்பதாவது நிர்வாண தீட்சை	=	குமாரக் கடவுள் (சனத் குமாரர்)
பத்தாவது நிர்வாண தீட்சை	=	நந்தியெம் பெருமான் (The Silent Watcher) (பிரணவ சொரூபம்)

குறிப்பு :—இதன் விரிவையும் விளக்கத்தையும் ஆசிரியரால் வெளிவரவிருக்கும் ''திருச்சிற்றம்பலம் என்ற அவனியின் அந்தரங்க அருளரசு'' என்ற நூலில் காண்க.

குமாரக் கடவுள் கௌமார சிருஷ்டியையும், நந்தியம் பெருமான் அனுக்கிரக சிருஷ்டியையும் சேர்ந்தவர்கள். இவைகள் தேவரகசியம் (Divine-Mystery) எனப்படும்.

நமது உலகின் அந்தரங்க அருளரசாட்சிக்குத் தலைவர் குமாரக் கடவுள் என்று பார்த்தோம். ஒரு கல்பத்திற்கு மூன்று குமாரக் கடவுளர் உண்டென்றும், இப்போதிருக்கும் சனத்குமார குமாரக்கடவுள் மூன்றுமவர் என்றும் பிரம்மஞான சங்க நூல்கள் கூறுகின்றன. நமது சாத்திரங்களிலும் இவை இலைமறை காயெனக் கூறப்பெற்றுள்ளன. இவருடன் இருக்கும் மூன்று குமாரர்களும் வரப்போகும் கல்பத்தில் குமாரக்கடவுள் பதவிக்கு வருவார்களெனவும் கூறப்படுகிறது.

நமது குமாரக்கடவுள் சுமார் 65 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தமிழர் இனம் தோன்றியபோது சுக்கிர கிரகத்திலிருந்து ஸ்ரீகண்ட பரமேஸ்வரரால் தக்ஷிணாமூர்த்தம் கோலங்கொண்டு, கல்லாலின் புடையமர்ந்து, இவருக்கு சிவஞானபோதம் உபதேசித்தருளி, ஒன்பதாவது நிர்வாண தீட்சையும் செய்வித்து இவ்வுலகிற்கு அனுப்பிவைக்கப் பெற்று, இமயமலையின் வடபாரிசத்திலுள்ள கோபி பாலைவனத்திலிருக்கும் ஒரு பொய்கையில் தம் கரத்தில் ஏந்திய ஒரு செங்கோலுடன் வந்திறங்கியதாகவும், அவருடைய சரீரம் தமது கிரியா சக்தியினால் அமைத்துக்

கொள்ளப்பெற்ற சுத்த மாயையினலாயது என்றும் பதினறு வயதுள்ள யௌவன சரீரம் என்றும் அவருடைய தோற்றம் பற்றி பிரம்மஞான சங்க நூல்களில் கூறப்பெற்றுள்ளது.

" குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும், பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும், காணப்பெற்ருல்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே "

—(அப்பர்)

என்று அப்பர் அடிகள் கூறியவாறு அவரது தோற்றம் காட்சி யளிப்பதாக இருக்கின்றதாம். இவருக்கு முருகன், கந்தன், சுப்பிரமணியர், ஆறுமுகன் என்ற பெயர்களும் உள.

தக்ஷிணமூர்த்தி சனகாதி முனிவர்கள் நால்வருக்குக் கல்லாலின் புடையமர்ந்து சின்முத்திரையால் ஞானேபதேசம் செய்ததை,

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்கமுதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.

என்று பண்டை செய்யுள் ஒன்றில் கூறப்பெற்றுள்ளது

இந்த தக்ஷிணமூர்த்தி சின்முத்திரையின் மறைபொருள் தத்துவங்களை விளக்க வந்ததே இந்நூலாகும்.



ஆசிரியர் :

திரு. பொன். கோவிந்தசுவாமி

உ

தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரை மறைபொருள் தத்துவ விளக்கம்

தக்ஷிணாமூர்த்தியும் குமாரக் கடவுளும்



கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
    ஆறங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
    பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
    இருந்தபடி இருந்து காட்டி
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
    நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்.

—(பரஞ்ஜோதி முனிவர்)

"நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றுஆலின் கீழிருந்து அங்கு அறமுரைத்தான் காணேடி"

—(மணிவாசகர்)

ஒரு காலத்தில் பத்மாசூரன் முதலிய அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட மண்ணுலகோரும் விண்ணுலகோரும் தேவர்களும் மூவர்களுமாகச் சேர்ந்து சர்வேஸ்வரனிடம் சென்று முறையிட, அவர் அவர்களுக்கு அபயமளித்து "நீங்கள் எதற்கும் அஞ்சற்க. கூடிய சீக்கிரம் எம் போன்ற ஒரு குமரனைப் பூவுலகிற்கு அனுப்பி அவ்வசுரர்களை யெல்லாம் அழித்து உங்களைக் காக்கின்றேன்'' என ஆசி கூறி அனுப்புகின்றார்.

இப்படியிருக்க சனகாதி முனிவர்கள் நால்வரும் - சனகர், சனந்தனர், சநாதனர், சனத்குமாரர் - தாங்கள் சகல வேதாகம சாத்திரங்கள், புராண இதிகாசங்களைக் கற்றும் தங்களுக்கு மனம் சாந்தியடையவில்லை; மனசாந்தியையும், நித்தியானந்தத்தையும் அடையும் மார்க்கத்தை தங்களுக்கு அருளிச் செய்தருளல் வேண்டுமென்று பரமேஸ்வரரை வேண்டி துதித்து நிற்கப் பரமேஸ்வரரும் அவர்கள்பால் கருணைத் திருவுளங்கொண்டு, தக்ஷிணாமூர்த்தம் எனப்படும் மௌன குரு கோலங்கொண்டு, கல்லாலின்கீழ் தெற்கு நோக்கி யோகத்தில் அமர்ந்து, அவர்களுக்கு சின்முத்திரைக் குறி மூலம் சிவஞானத்தை யருளிச் செய்து, ஒன்பதாவது நிர்வாண தீட்சையையும் செய்வித்தருள்கின்றார். முனிவர்களும் ஐயம் தீர்ந்து, மனசாந்தியுற்று பேரானந்தப் பெரும்பேற்றை யடைந்தனர்.

ஸர்வேஸ்வரன் இவ்வாறு யோகத்தில் அமர்ந்திடவே, பிரபஞ்சத்தில் பஞ்சகிருத்தியங்கள் ஒன்றும் நடைபெறாமல் எல்லாம் ஸ்தம்பித்து, உயிர்கள் அவதியுறலாயின. எனவே தேவர்களும் மூவர்களும் ஒன்றுகூடி இந்நிலையை நிவர்த்திப்பது எப்படியென்று ஆலோசனை செய்து, முடிவாக மன்மதனை அனுப்பி ஸர்வேஸ்வரரின் பேரில் தனது காம பாணத்தைத் தொடுக்குமாறு செய்கின்றனர். சர்வேஸ்வரன் யோகநிலை கலைந்து, சீற்றத்துடன் நெற்றிக் கண்ணைத் திறக்க, அதிலிருந்து கிளம்பிய தீப்பொறிகள் காமனை எரிக்கின்றன. தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்க சர்வேஸ்வரன் எரித்த காமனை எழுப்பிக் கொடுக்கின்றார். பிரபஞ்சத்தில் வழக்கம்போல் பஞ்சகிருத்தியங்கள் நடைபெறலாயின.

சர்வேஸ்வரன் நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய ஆறு தீப்பொறிகளும் ஒன்றுசேர்ந்து சுப்பிரமணியராக அவதரித்துப் பூலோகத்தில் வந்திறங்கி இமயமலைச் சாரலிலுள்ள சரவணப் பொய்கையில் அமர்கின்றார். இவருக்கு கந்தன், முருகன்,

குமரன் எனப் பல நாமங்களுண்டு. சர்வேஸ்வரன் தேவர்களுக்கருளியவாறு, குமாரக் கடவுள் சேனைகளுடன் படையெடுத்துச் சென்று பத்மாசூரன் முதலிய அசுரர்களோடு போர் தொடுத்து அவர்களையெல்லாம் சம்ஹரித்தழித்து தேவர்களையும், மண்ணுலகோரையும் காத்தருள்கின்றார்.

இதுதான் குமாரக்கடவுளின் அவதாரத்தைப் பற்றிய புராணக் கூற்றுக்களின் சுருக்கமாகும். இதில் அநேக தேவ ரகசியங்களும், மறைபொருள்களும் (Occult Truths) புதைந்துள்ளன. அவற்றை பிரம்மஞான சங்க நூல்களில் காணலாம். இவற்றின் விரிவை ஆசிரியரால் வெளிவரயிருக்கும் ''விஞ்ஞான, மெய்ஞ்ஞான ஒளியில் கந்த புராணம்'' என்ற நூலில் காண்கவும்.

இனி தக்ஷிண மூர்த்தியின் கோலக் குறிகளின் மறைபொருள் தத்துவங்களைப் பற்றிப் பார்ப்போம்.

மேலே சொல்லியவாறு தக்ஷிணாமூர்த்தம் ஸ்ரீகண்ட பரமேஸ்வரரின் மகா மௌன குரு அவதாரமாகும். இவர்தாம் நமது அண்டத்தின் பதியாகும் (Solar Logos). அவரது சடாபாரத்தில் தாங்கி நிற்கும் ஆகாச கங்கையானது மேல் இடத்திலிருந்து வரும் சிவ சக்தியாகும். அதை அவர் தாங்கிக் குமாரக்கடவுள் மூலம் நமது உலகில் செலுத்துகின்றார்.

அவர் சடாபாரத்தில் தரித்திருக்கும் தேய்பிறைச்சந்திரன் பல தத்துவங்களை உள்ளடக்கி யிருக்கின்றது. விரிக்கிற் பெருகும்; அவற்றைப் புராணங்களில் காணலாம். ஒன்றை மட்டும் இங்கே சொல்ல விழைகின்றேன். இதுபோது உயிர்களின் விகாச முறை அதாவது வளர்ச்சி மலர்ச்சி முறை (Evolution of Life) நமது உலகில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நமது உலகு தோன்றுவதற்கு முன் அவ்விகாச முறை சந்திரனில் நடைபெற்று வந்தது. சர்வேஸ்வரனுடைய கிருபாகடாட்சம் எந்த உலகில் செலுத்தப்படுகின்றதோ அந்த உலகில்தான் விகாச முறை நடைபெறும். இறைவனின் கண்ணோட்டம் அவ்வுலகினின்றும் விலக்கிக்கொள்ளப் படுமாயின் அவ்வுலகு இறந்துபட்டுத் தேய்ந்து அழிந்துபோகும். உயிர்களின் விகாச முறையின் ஒரு கட்டம் சந்திரனில் முடிந்ததும், அதன் அடுத்த கட்டம் நமது உலகில் நடைபெற வேண்டி யிருந்ததால் இறைவனின் கடாட்சம் சந்திரனிடமிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டு நமது உலகில் திருப்பிவிடப்பட்டது. அதுபோது சந்திரனிலிருந்த

உயிர்கள் எல்லாம் நமது உலகிற்கு மாற்றப்பட்டன. அன்றி விருந்து உயிரற்ற சந்திரன் (Dead Planet) தேய ஆரம்பித்து விட்டது. இனி சந்திரகிரகம் மறைந்து போகும். இது ஆயிரக் கணக்கான வருடங்களாகலாம். நமது உலகில் இந்தக் கட்டத் தின் விகாச முறை முடிவடைந்ததும் அதன் அடுத்தக் கட்டம் புதன் கிரகத்தில் நடைபெறும் என்று பிரம்மஞான சங்க நூல்கள் கூறுகின்றன.


அவர் ஆபரணமாக அணிந்திருக்கும் நல்ல பாம்புகள் ஆதி சக்தி (Fohat)யின் பல்வேறு பிரிவுச் சக்திகளைக் குறிக்கின்றன. நல்லபாம்பு பெண் இனம். பெண்கள் சக்தியின் வடிவாகும்.

மற்றும் தக்ஷிணாமூர்த்தி அணிந்திருக்கும் ஆடைகள் மான் தோல், புலித்தோல், யானைத்தோலாகும். ஆன்மாவை பீடித் திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களில் மான் ஆணவ மலத்தையும், புலி கன்ம மலத்தையும், யானை மாயா மலத்தையும் குறிக்கின்றன. நாம் இறைவனை அடைய வேண்டுமானால் இம்மும்மலங்களையும் வென்று அடக்கவேண்டும். அப்போதுதான் யோகநிலை கைக்கூடும் என்பதைக் காட்டவே இறைவன் மான், புலி, யானை இவற்றைக் கொன்று அவற்றின் உயிரற்ற, சக்தியற்ற தோலை ஆடைகளாக அணிந்திருக்கின்றார்.

மகா மௌனகுரு தக்ஷிணாமூர்த்தி அமர்ந்திருக்கும் ஆலமரம் "ஞான விருக்ஷம்" (Tree of Wisdom) எனப்படும். இதன் வேர் மேலேயும், கிளைகள் கீழ்நோக்கியும் இருக்கும். இது மேலே கூறிய திருச்சிற்றம்பலத்தைக் (Occult Hierarchy & Spiritual Dynasty) குறிக்கின்றது. அது எதைக் காட்டுகின்றது என்றால் திருச்சிற்றம்பலத்தின் மூலம் அதன் தலைவராகிய தக்ஷிணாமூர்த்தி யையும், அதன் கிளைகள் இவ்வுலகில் எல்லாப் பகுதிகளிலும் விரிந்து படர்ந்திருக்கின்றன என்பதையும் காட்டுவதாகும். "அண்டத்திலுள்ளது பிண்டத்திலும்" என்ற இறை நியதிப்படி (Divine Law) அண்டத்தில் தக்ஷிணாமூர்த்தியைத் தலைவராகக் கொண்ட திருச்சிற்றம்பலத்திற்குப் பொன்னம்பலம் அல்லது கனகசபை என்ற பெயரும், பிண்டமாகிய இவ்வுலகில் விரிந் திருக்கும் அதன் கிளைகட்குக் குமாரக்கடவுளைத் தலைவராகக் கொண்ட வெள்ளியம்பலம், ரஜிதசபை, சிற்சபை எனவும் பெயர்களாகும். இதைத்தான் வள்ளல் பெருமானும் "பொற் சபையும் சிற்சபையும் எனதெனலாச்சே" என்று அருளி யுள்ளார்கள்.

முழுமுதற் பொருளாகிய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் நிலை மூன்று விதங்களாக உள்ளன. முதலாவது அருவமாகிய அகளநிலை அதாவது ஆதியந்தம் அற்றதும், பிறப்பு இறப்பு அற்றதும், மனோவாக்குக் காயங்கட்கு அப்பாற்பட்டதும், முப்பாழும் பாழாய் முதற்பாழும் பாழாய் அப்பாழுக்கு அப்பாலுள்ள நிலை. (The One Absolute Reality beyond unmanifestation). இந்த நிலை அநிர்வசனீயம். இரண்டாவது அருவுருவமாகிய நிஷ்கள நிலை அதாவது பிரபஞ்சம் வெளிப்பட்டுத் தோன்றுவதற்கு முன்னுள்ள இறைவன் சங்கல்ப மாத்திரமான அவ்வியக்த நிலை (Unmanifested Divine Ideation). மூன்ருவது உருவமாக்ய சகள நிலைஅதாவது பிரபஞ்சம் வெளிப்பட்டுத் தோன்றும் வியக்தநிலை (Manifested Universe). இதற்கு நமது முழு உடலை முதல் நிலைக்கும்,தோள்பட்டை முதல் விரல் நுனிவரையிலான கையைஇரண்டாவது நிலைக்கும், விரல்களுடன் கூடிய உள்ளங்கையை மூன்ருவது நிலைக்கும் ஒப்பிடலாம். இவற்றை தக்ஷிணமூர்த்தியுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

இப்போது வியக்தமான பிரபஞ்சத்தைக் குறிக்கும் விரல்களுடன் கூடிய உள்ளங்கையை எடுத்துக்கொள்வோம்; இப்பிரபஞ்சம் பதி, பசு, பாசம் என்ற மூன்று அநாதி நித்தியப் பொருட்களைக் கொண்டது. பாசம் ஆணவம், கன்மம், மாயை என்ற முப்பொருட்களைக் கொண்டதால் அநாதி நித்தியப் பொருள் ஐந்து என்றும் எடுத்துக்கொள்ளலாம். உள்ளங்கையிலுள்ள ஐந்து விரல்களும் இந்த ஐந்து அநாதி நித்தியப் பொருட்களைக் குறிக்கின்றன.



கட்டை விரல் பதியையும், சுட்டு விரல் பசுவையும், நடு விரல் ஆணவமலத்தையும், மோதிர விரல் கன்ம மலத்தையும், சுண்டு விரல் மாயா மலத்தையும் குறியா நின்றன. ஒவ்வொரு விரலிலும் மூன்று பகுதிகள் இருப்பதுபோல் பதி, பசு, ஆணவம்

கன்மம், மாயை என்ற ஐந்தினும் ஒவ்வொன்றிலும் மூன்று பிரிவுகள் இருக்கின்றன.

1. பதியில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மூன்று தோற்றங்களும் சத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று குணங்களும் இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்று சக்திகளும் உள்ளன. கட்டை விரல் இல்லாமல் மற்ற விரல்களால் ஒன்றும் செய்துகொள்ள முடியாது. அதுபோல் பதி இல்லாமல் இப் பிரபஞ்சம் இயங்காது.

2. பசுவில் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என்ற மூன்று பிரிவுகளும் சகலரில் சாமுசித்தர் (உத்தமர்), வைநயிகர் (மத்திமர்), பிராகிருதர் (அதமர்) என்ற முப்பிரிவுகளும் உள்ளனர். சத்து சித்து, ஆனந்தம் என்ற முக்குணங்களும், தாமசம், இராஜசம், சாத்துவிகம் என்ற மூன்று தன்மைகளும், இச்சை, அறிவு, செயல் என்ற முத்தொழில்களும் உள.

3. ஆணவத்தில் ஆசை, நான் என்ற அகங்காரம், எனது என்ற மமகாரம் ஆகிய மூன்று குணங்கள் உள்ளன.

4. கன்மத்தில் சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்ற மூன்று பகுதிகளும் கர்மம், விகர்மம், அகர்மம் என்ற மூன்று தன்மைகளும் உள்ளன.

5. மாயா மலத்தில் சுத்த மாயை (விந்து), சுத்தா சுத்த மாயை (மோகினி), அசுத்த மாயை (மான்) என்ற மூன்று பிரிவுகள் உள்ளன. அவற்றின் குணத்திலும் சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற மூன்று தன்மைகள் உள்ளன.


ஆணவம் அநாதியாகவுள்ள சகச மலம் எனவும், கன்மமும், மாயையும் நடுவில் வந்த ஆகுந்தக மலங்கள் எனவும் படும்.

பசுக்கள் சத்துப் பொருளாய பதியை சார்ந்தால் சத்தாகவும், அசத்துப் பொருளாய பாசத்தைச் சார்ந்தால் அசத்தாகவும் இருக்கும். ஆதலால் பசுவின் தன்மை சதசத்தாகும்.

இந்தக்குறி ஆன்மா ஆணவத்தோடு கூடி அத்துவிதமாகயிருக்கும் கேவலாவத்தை நிலையைக் குறிக்கின்றது. பசு(ஆன்மா) ஞான மார்க்கத்தில் செல்ல ஞான சாதனங்களுடன் "பரிவிராஜகன்" என்ற முதல் ஞான தீட்சையைப் பெறல் வேண்டும்.


ஐந்து விரல்களும் உள்ளங்கையினின்றும் தோன்றியிருப்பது போன்று பதி பசு, பாசங்களாகிய ஐந்தும் சிவத்தின் தோற்றமாகும். உள்ளங்கை நிஷ்களம் (அவ்யக்தம), விரல்கள் சகளம் (வியக்தம்) எனலாம்.

இக்குறி ஆன்மா அரன்கழல் அடைவதைக் குறிக்கின்றது. சுட்டு விரலுக்கும் கட்டை விரலுக்கும் உள்ள தொடர்புபோல் பசுக்கும் பதிக்கும் இடையரு தொடர்பு உண்டு; இரண்டும் ஓர் இனம். சுட்டு விரல் கட்டை விரலைத் தொட வளைந்து செல்லும்போது கட்டை விரலும் வளைந்து சுட்டு விரலை நோக்கி செல்வது போன்று, பசு பதியை நோக்கிப் பணிந்து வணங்கி செல்லும்போது பதியும் கற்று போல விரைந்து சென்று பசுவை எதிர்கொண்டு அணைத்துக் கொள்கின்றது. பசவுக்கும் பதிக்கும் உள்ள தொடர்பு மர்க்கட (குரங்கு) நியாயம், மார்ஜால (பூனை) நியாயம் என்பதாகும்.




1

இந்தக்குறி பசுவின் தாசமார்க்க நிலையையும், அடையும் சாலோக பதவியையும் குறித்து நிற்பது. சாலோகம் என்றால் லௌகீக உலகை விட்டு வைதீக உலகிற்குச் செல்லுதலாம். அடிமைக்கும் ஆண்டானுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தம் தாச மார்க்கம் எனப்படும். இந்த சாலோக பதவியை அடைய, பெறவேண்டிய தீட்சை "குடீசகன்" என்ற இரண்டாவது ஞான தீட்சையாகும்.



2


இக்குறி பசு பதியை சற்று சமீபத்தில் நெருங்கும் பரஸ்பரம் அன்பு மேலிட்ட சற்புத்திரமார்க்க நிலையை குறிக்கின்றது. இதனால் சாமீப்ய பதவியை அடையலாம். இதை அடைவதற்கு "பகூதகன்" என்ற மூன்றாவது ஞான தீட்சையைப் பெறுதல் வேண்டும்.



இக்குறி பசு பதியோடு சம நிலையில் நிற்கும் சக மார்க்கம் அல்லது தோழ மார்க்கம் என்ற நிலையைக் குறிக்கின்றது. இதனால் அடையும் பதவி சாருபமாம். இதை யடைய "ஹம்ஸன்" என்ற நான்காவது ஞான தீட்சையைப் பெற்று சோகம்பாவனையில் நிற்கவேண்டும்.

மேலே சொன்ன சாலோக, சாமீப்ய,சாருபநிலைகள் ஆன்மா தனு, கரண, புவன, போகங்களோடு கூடிய சகலாவத்தை நிலையாகும்.

இக்குறி பசு பதியோடு இரண்டறக் கலந்த "தத்வமசி" என்ற ஐக்கிய பாவமாகிய சன்மார்க்க நிலையாகும். இந்த சாயுச்ய பதிவியை அடைய "பரமஹம்ஸன்" என்ற ஐந்தாவது ஞான தீட்சையைப் பெறல் வேண்டும். இதைப் பெற்றவர்களே ஜீவன் முக்தர்கள் ஆவர்.



இந்நிலை ஆன்மா தானுவோடு அத்துவிதமாய் நிற்கும் சுத்தாவஸ்தை நிலையாகும்.

ஒரு சீவன் முதலாவது ஞான தீட்சையைப் பெறுமுன் அவன் (1) நித்தியா நித்திய வஸ்து விவேகம் (2) இகமுத்ரார்த்த பல போக விராகம் (3) சமாதி சட்சம்பத்து - சமம், தமம், விடல், சகித்தல், சமாதானம், சிரத்தை - (4) முமுட்சத்துவம் ஆகிய சாதன சதுட்டங்களைக் கைவரப்பெற்று, கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்று சொல்லப்பெற்ற மார்க்கங்களில் ஏதாவது ஒன்றை ஆர்வத்துடன் அப்பியசித்தல் வேண்டும்.

சீவாத்மா சீவன் முக்ததசை யடையுமுன்பு பத்துவிதமான பந்தங்களினின்றும் (தளை அல்லது தடை) விடுபடல் வேண்டியது அத்யாவசியமாகும். அந்த பத்து பந்தங்களாவன :—

1. மயக்கம் அதாவது விபரீதம்
2. ஐயம் அதாவது சந்தேகம்
3. உலகாசார சமயாசார சங்கற்ப, விகற்பங்கள்
4. காமம்
5. குரோதம்
6. தூலதேகப் பற்று, இக லோக போக இச்சை
7. சூக்கும தேகப்பற்று, பர லோக போக இச்சை
8. ஆணவம்
9. அழற்சி அதாவது எரிச்சல்
10. அவித்தை அதாவது அஞ்ஞானம்

இராசி மண்டலம்

சின்முத்திரையில் மேலும் என்னென்ன மறைபொருள் தத்துவங்கள் புதைந்துள்ளன வென்பதைப் பார்ப்போம். தக்ஷிணாமூர்த்தம் ஸ்ரீகண்ட பரமேஸ்வரரின் மகாமௌன குரு அவதரம் என்பதையும், ஸ்ரீகண்ட பரமேஸ்வரர் சூரியனை மைய மாகக் கொண்ட இந்த சூரியாண்டத்தின் பதியென்றும் மேலே பார்த்தோம். இந்த சூரியாண்டத்தை ஹிரண்யகர்ப்பம் அதாவது தங்கமயமான முட்டை வடிவம் என்பர்.


இந்த சூரிய மண்டலத்தை மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்ற பன்னிரண்டு இராசிகளாக வகுத்துள்ளனர். ஒவ்வொரு இராசிக்கும் 30 பாகைகள். மேஷம் ஆட்டின் உருவம்; ரிஷபம் எருது உருவம்; மிதுனம் ஒரு பெண்ணும் ஒரு ஆணும் சேர்ந்தது; கடகம் நண்டு உருவம்; சிம்மம் சிங்க உருவம்; கன்னி ஒரு பெண் உருவம்; துலாம் திராசு பிடித்த புருஷ உருவம்; விருச்சிகம் தேள் உருவம்; தனுசு அரைக்குமேல் வில் பிடித்த புருஷ உருவம், அரைக்குக் கீழ் குதிரை ரூபம்; மகரம் சுறுமீன் உருவம்; கும்பம் குடம் ஏந்திய புருஷ உருவம்; மீனம் மீன் உருவம். ஒவ்வொரு இராசியிலுள்ள நட்சத்திரக் கூட்டங்கள் மேற்படி உருவங்களாக அமைந்துள்ளன என்பர்.

இராசிகளின் பலன்

மேஷம்	புத்தி, செல்வம்	துலாம்	=	ஜனப்பிரியன்
ரிஷபம்	தெய்வ பக்தி	விருச்சிகம்	=	யதார்த்தன்
மிதுனம்	புகழ்	தனுசு	=	கீர்த்தி
கடகம்	தைரியம்	மகரம்	=	தீரம்
சிம்மம்	சற்புத்திரன்	கும்பம்	=	சிரேட்டன்
கன்னி	சொல்வன்மை	மீனம்	=	ஞானம்

மேற்கண்ட 12 இராசிகளும் அசுவனி முதல் ரேவதி யீருக 27 நட்சத்திரங்களை அடக்கியுள்ளன. இந்தப் பன்னிரண்டு இராசிகளையும் வீடுகளாகக் கொண்ட சப்த கிரகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு இராசிக்கும் ஒவ்வொரு மாதம் உண்டு. அவை வருமாறு :—

மீனம் குரு பங்குனி	மேஷம் செவ்வாய் சித்திரை	ரிஷபம் சுக்கிரன் வைகாசி	மிதுனம் புதன் ஆனி
கும்பம் சனி மாசி	இராசி மண்டலம்		கடகம் சந்திரன் ஆடி
மகரம் சனி தை			சிம்மம் சூரியன் ஆவணி
தனுசு குரு மார்கழி	விருச்சிகம் செவ்வாய் கார்த்திகை	துலாம் சுக்கிரன் ஐப்பசி	கன்னி புதன் புரட்டாசி



இந்த பன்னிரண்டு இராசிகளும் கையிலுள்ள கட்டை (பதி) விரல் நீங்கலாக மற்றைய நான்கு விரல்களிலும் விரல் ஒன்றுக்கு மூன்று இராசிகளாக அமைந்துள்ளன. மேலுள்ள படத்தைப் பார்க்கவும்.

இந்த இராசி மண்டலக் குறிகள் பன்னிரண்டிற்கும் உருவங்கள் உண்மையில் விண் வெளியில் காணப்படுகின்றனவா என்று பார்த்தால் அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. பின் இந்த உருவங்களின் பெயர்கள் என்ன மறை பொருட்களை (Occult Truths) தன்னகத்து அடக்கிக் கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டறிய சில வழி முறைகள் இருக்கின்றனவாம். இந்த

''இராசி மண்டலக் குறிகள்'' என்ற நூலின் ஆசிரியர் மேற் கூறிய இராஜயோகி சுப்பராவ் அவர்கள் இந்தக் குறிகள் அநேக இரகசிய கருத்துக்களைத் தன்னுள் மறைத்துக் கொண்டிருக் கின்றன வென்றும், தான் அந்தத் திரைச் சீலையின் மூலையை ஒரு சிறிது மட்டும் நீக்கிக் காட்டுவதாகவும் எழுதியுள்ளார்கள். மேலும் இந்த இராசிப் பெயர்களின் மறை பொருட்களை எப் படிக் காண்பது என்பதற்கான சில குறிப்புக்களையும் கொடுத் துள்ளார்கள். அவையாவன :—

1. ஒரு பதத்தின் அந்தரார்த்தத்தைக் கண்டு பிடிக்க அந்தப் பதத்தின் பொருளையே கூறும் வேறு சொற்களைக்கண்டு அச்சொற்களுக்குள்ள வேறு பொருட்கள் என்ன என்பதைக் கண்டறிதல்.

2. ஆகமங்களின் தந்திரப் பகுதியில் கொடுத்திருக்கும் எண் சாஸ்திரத்தில் (Numeralogy) அந்தப் பதத்திலுள்ள எழுத் துக்களுக்கு எண் சாத்திரப்படி என்ன மதிப்புக் கொடுக்கப் பட்டிருக்கின்றது என்பதை கண்டறிதல்.

3. இந்தப் பதங்கள் புராண இதிகாசங்களில் எந்த சந்தர்ப்பத்தில் என்ன கருத்துப்பட வந்திருக்கின்றன என் பதை அறிதல்.

4. ஒரு சொல்லின் அசை (பகுதி, விகுதி)களை தலைப்பு மாற்றிப் போட்டு வரும் பதத்தின் கருத்து என்ன என்று பார்ப்பது.

மேற்சொன்ன இந்த விதிகளைக் கொண்டுதான் இந்த இராசி மண்டலக் குறிகளின் மறைபொருள்களைக் கண் டறிந்ததாக நூல் ஆசிரியர் கூறுகின்றார். அதன்படி இந்தக் குறிகளுக்கு ஆசிரியர் என்ன வியாக்கியானம் கொடுத்திருக் கின்றார் என்பதைப் பார்ப்போம்.

1. மேஷம் : மேஷம் என்றால் ஆடு. இதற்கு வடமொழி யில் ''அஜா'' என்ற ஒரு பெயர் உண்டு. அஜா என்றால் பிறப் பற்றது. ஜ என்றால் பிறப்பு; அஜா என்றால் பிறப்பு இல்லாதது. இது எதைக் குறிக்கின்றது என்றால் ஆதியந்தம் அற்றதும், பிறப்பு இறப்பு அற்றதும், போக்கு வரவு அற்றதும், நாமரூபம் அற்றதும், குணங்குறி அற்றதுமான ஒரு பரம்பொருளைக் குறிக் கின்றது. இதை சித்தாந்திகள் சிவம் என்றும், வேதாந்திகள் பிரம்மம் என்றும் கூறுவர். இதன் இலக்கணத்தை மேலே

முதல் பகுதியாகிய அகள நிலையாக கூறியுள்ளேன். (The One Ultimate Absolute Reality beyond Unmanifestation).

2. ரிஷபம் : ரிஷபம் என்ருல் மாடு. இது பிரணவத்தைக் குறிக்கின்றது. சிவனுக்கு இரண்டு ரிஷபங்கள்; ஒன்று வாகனம், மற்ருென்று வாயிற்காப்போன். வாகன ரிஷபம் தர்ம சொருபத்தையும், வாயிற் காவல் ரிஷபம் பிரணவ சொருபத்தையும் குறிக்கின்றது. வாயிற் காப்போன்தான் மேலே சொல்லிய நந்தியெம்பெருமான் (The Silent Watcher). பரமேஸ்வரரைப் பிரணவ சொருபி என்றும், நாதப் பிரம்மம் என்றும் சாத்திரங்கள் கூறுகின்றன. பிரபஞ்சத் தோற்றத்திற்குப் பிரணவஒலியே மூலகாரணமாம். ''ஓசை ஒலி யெல்லாம் ஆனுய் நீயே'' திருவாசகம். இது மேலே கூறிய பதி இலக்கணத்தின் இரண்டாவது நிலையாகிய நிஷ்கள நிலையாம் (Unmanifestation).

3. மிதுனம் : ஆணும் பெண்ணும் ஜோடியாக உள்ள இக்குறி சிவனின் அர்த்தநாரீஸ்வரர் வடிவைக் குறிக்கின்றது. ஒரே ஓசையாய் இருந்த பிரணவம் நாதம் (ஆண்), விந்து (பெண்) ஆகப் பிரிந்தது. ஏகமாகிய சிவம் சிவன் சத்தியாகத் தோன்றிற்று. ''சிவம் சத்திதனை ஈன்றும், சத்திதான் சிவத்தை ஈன்றும், உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும்'' என்பது சாத்திரம். ஆணும் பெண்ணும் ஆய (Spirit and Matter; Positive and Negative) இரண்டும் சேர்ந்து தான் இப்பிரபஞ்சம் தோன்றிற்று. இது முதல், பதியின் மூன்ருவது நிலையாகிய சகள நிலையைக் கூறுகின்றது (Manifested Universes).

4. கடகம்: இந்தப்பதம் எண் சாஸ்திரப்படி (Numeralogy) 4 ஐ குறிக்கின்றது. இந்த 4 பல பொருட்களைக் குறித்து நிற்கின்றது. நான்கு வாக்குகள், நான்கு சக்திகள், நான்கு மூர்த்தங்கள், நான்கு அவத்தைகள் முதலானவற்றைக் குறித்து நிற்கின்றது. பரை, பைசந்தி. மத்தியமை, வைகரி என்ற 4 வாக்குகளையும் நாதம், பிந்து, சக்தி, கலை என்ற 4 சத்திகளையும் வைஸ்வாரனன், தைஜசன், பிராஞ்ஞன், ஈஸ்வரன் என்ற சிவனின் 4 நிலைகளையும் தூலம், சூக்குமம், பீஜம், சக்தி என்ற சிவத்தின் 4 திருமேனிகளையும் பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன் என்ற 4 மூர்த்தங்களையும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் என்ற 4 அவத்தைகளையும் குறித்து நின்றது.

5. சிம்மம்: இப் பதத்திற்கு இரண்டு பொருள்கள் உள. ஒன்று பாஞ்சசயம், மற்றொன்று ஹரி. பாஞ்சசயம் என்றது ஐந்து முகம் எனப்படும். இது சதாசிவனின் ஈசானம், அகோரம், தத்புருஷம், வாமதேவம், சத்யோஜதம் என்ற 5 முகங்களைக் குறிப்பிடுகிறது. இந்த ஐந்து முகங்களாலேயே சதாசிவன் அகத்தியர் முதலிய ஐந்து மகரிஷிகளுக்கு 28 சிவாகமங்களை அருளிச் செய்தாரென சாத்திரங்கள் கூறுகின்றன. அதனாலன்றோ இந்த இராசி ஐந்தாவது இடத்தில் வைக்கப் பெற்றுள்ளது.

இரண்டாவது அர்த்தமாகிய ஹரிக்கு நரநாராயணன் என்ற பெயரும் உண்டு. இது கூடஸ்தன் அல்லது பிரத்தியேகாத்மாவைக் குறிக்கின்றது. பரமாத்மாவின் அம்ஸமாகிய இந்த ஜீவாத்மாதான் பின் சொல்லப்பட்ட தனு, கரண, புவன, போகங்களை அடைந்து இன்ப துன்பங்களை அனுபவிப்பன். அதனால்தான் இந்த சிம்ம ராசியை புருடஸ்தானம் என்று சோதிட நூல்கள் கூறுகிற்கும்.

6. கன்னி: இந்த இராசியின் பெண் உருவம் மகாமாயா சக்தியைக் குறிக்கின்றது. சத்திகள் பல; மாணிக்கவாசகரும் "ஆறுகோடி மாயா சக்திகள் வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின" எனக் கூறியுள்ளார். இந்த இராசி ஆறும் இடத்தில் இருப்பதால் எல்லா சத்திகளையும் ஆறு முதன்மை சக்திகளில் அடக்கலாம். "சத்தியாய், விந்து சத்தியாய், மனோன்மணி தானாகி, ஒததுறு மகேசையாகி, உமை, திருவாணியாகி வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன் வரும் சத்தி ஒருத்தியாகும்; எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்று சித்தியாரும் அருளியுள்ளார் இச்சத்திகளை இன்னும் பராசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, குண்டலினி சத்தி, மந்திர சத்தி என ஆறு சத்திகளாகவும் சில சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. எல்லா சத்திகளும் ஆதிசத்தியின் (Fohat) தோற்றங்களாகும்.

7. துலாம்: இப்பதம் தாந்திரத்தின் எண் சாத்திரப்படி எண் 36ஐ உடையது. இது 36 தத்துவங்களைக் குறிக்கின்றது. தத்துவங்களைப் பல சாத்திரங்கள் பலவாறாகப் பிரித்திருக்கின்றன. ஆனால் எல்லாம் இந்த 36 தத்துவங்களில்அடங்கும். அவை யாவன:—அசுத்த மாயை அல்லது மூலப்பிரகிருதியாலாய

பூதம் 5, தன் மாத்திரை 5, கர்மேந்திரியம் 5, ஞானேந்திரியம் 5, அந்தக்கரணம் 4 ஆக ஆன்மதத்துவம் 24; சுத்தா சுத்த மாயையாலாய காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை ஆகிய வித்தியா தத்துவம் 7; சுத்த மாயையாலாய சுத்தவித்தை, ஈஸ்வரம், சதாக்கியம், சத்தி, சிவம் ஆகிய ஈஸ்வர தத்துவம் 5 ஆக தத்துவங்கள் 36. இப்பிரபஞ்சம் தத்துவங்களால் ஆனவை.

8. விருச்சிகம்: இந்த இராசியில் சூரியன் சஞ்சரிக்கும் போது அதற்கு விஷ்ணு என்ற பெயர். அதனுற்ருன் கதிரவன் சூரிய நாராயணன் என அழைக்கப்படுகிருன். அதனுல் இந்த இராசி விஷ்ணுவைக் குறிக்கின்றது. விஷ்ணு சொப்பனுவத்தையிலுள்ள சிருஷ்டி சங்கற்ப மனேதத்துவமாகும். எப்படி ஒரு சிற்பி ஒரு சிலையைச் செய்ய ஆரம்பிக்குமுன் அதன் உருவத்தை தன் மனதில் சங்கற்பித்துக்கொண்டு பின்பு செய்ய ஆரம்பிக்கின்ருனே அதேபோல் ஈஸ்வரன் இப்பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்குமுன் அப்பிரபஞ்சத்தின் விவரங்களைத் தன்மனதில்சங்கற்பித்துக் கொள்கின்ருன். அந்த சிருஷ்டி சங்கற்பத்தைத்தான் இந்த இராசி குறிப்பிடுகின்றது. ரிஷப ராசி முதல் துலாம் இராசி வரையிலான தத்துவங்களைப் பார்த்தால் இது விளங்கும். விரிக்கிற் பெருகுமாகையால் இவற்றை மூல நூலில் காண்க.

9. தனுசு: தாந்திரத்தின் எண் சாத்திரக் கணிதப்படி இந்த இராசியின் எண் 9 ஆகும். இந்த இராசி ஒன்பதாவது இராசியாக இருப்பதும் கவனிக்கத்தக்கது. இது தக்ஷன், மரீசி, அத்திரி, பிருகு, புலஸ்தியர், அங்கிரசு, கிருது, கார்த்தமா, ருசி என்ற நவப்பிரஜாபதிகளைக் குறிக்கின்றது. இந்த 9 பிரஜாபதிகளும் பிரம்மாவின் மானச புத்திரர்கள் ஆவர். சனகாதி முனிவர்கள் நால்வரும் பிரஜாசிருஷ்டியில் பிரவர்த்தியாமல் மோக்ஷமார்க்க வைராக்கியமடைந்து யோக நிஷ்டையில் இறங்கி விடவே, பிரம்மாவானவர் பின்னர் இந்த 9 பிரஜாபதிகளையும் சிருஷ்டித்து இவர்கள் மூலம் தேவ, மானுஷிய, திரியக், ஸ்தாவரங்களாகிய சிருஷ்டிகளை உண்டாக்கி விருத்தி செய்தார் என்று விஷ்ணு புராணம் கூறுகின்றது.

இரண்டாவதாக இந்த இராசி சூரியாதி நவக்கிரகங்களையும் குறிக்கின்றது. இந்த நவக்கிரகங்களே உயிர்களின் வினைகளை அடக்கி ஆள்பவர்கள் இது பற்றிப் பின்னுல் சொல்லப்படும்.

"சூரியன், சோமன், செவ்வாய்
சொற்புதன், வியாழன், வெள்ளி
சனியொடு ராகு கேது
கடவுளர் ஒன்பானுரும்"

என்பது பண்டைய சோதிட நூல் கூற்றுகும்.

10. மகரம்: மகரம் என்பதில் ம+கரம் என்ற இரண்டு பதங்கள் இருக்கின்றன. ம என்ருல் தசம் அதாவது பத்து; கரம் என்ருல் புஜம் அல்லது பக்கம். ஆதலால் இது அட்ட திக்குகளையும், மேல், கீழ் என்ற இரண்டு பக்கங்களையும் ஆக தச திசைகளைக் குறிக்கின்றது. அதனுல்தான் இந்த இராசி பத்தாவது இடத்தில் இருக்கிறது.

11. கும்பம்: தாந்திர எண் சாத்திரப்படி இந்த இராசி யின் எண் 14 ஆகும். இது பூ, பூவர், சுவர், மகர், ஜனோ, தபோ சத்தியலோகம் ஆகிய மேல் 7 உலகங்களையும், அதல, விதல, சுதல, தராதல, மகாதல, ரசாதல, பாதாளம் என்ற கீழ் 7 உலகங்களையும் குறித்து நிற்கின்றது.

12. மீனம்: தாந்திர எண் சாத்திரப்படி இந்த இராசி யின் எண் 5. ஆதலால் இந்த இராசி பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பூதங்களையும் அதன் பஞ்சீகரணத்தையும் குறித்து நின்றது. பிரபஞ்சம் இந்த பஞ்சபூதங்களால் ஆனவை. மற்றும் தாவரம், திரியக் (மிருகம்), தேவ, மானுஷ்ய, குமரர் ஆகிய பஞ்ச சிருஷ்டிகளையும் குறிக்கின்றது.

இவ்வாறு சம்புபட்ச அணுபட்ச சிருஷ்டிகளையும், இப்பிர பஞ்சத்தின் சிருஷ்டியையும், நமது உலக சிருஷ்டியையும் ஆதியோடந்தமாகக் குறிப்பிடுவது இந்த பன்னிரண்டு இராசிகளாம்.

நவக்கிரகங்கள்

1.	சூரியன்	ஞாயிறு	ஆதிவாரம்
2.	சந்திரன்	திங்கள்	சோமவாரம்
3.	அங்காரகன்	செவ்வாய்	மங்களவாரம்
4.	புதன்	புதன்	புதவாரம்
5.	குரு	வியாழன்	குருவாரம்
6.	சுக்கிரன்	வெள்ளி	சுக்கிரவாரம்
7.	சனி	சனி	சனிவாரம்

8. இராகு 9. கேது

இந்த ஒன்பது கிரகங்களில் இராகுவும் கேதுவும் சாயாக் கிரகங்கள் எனப்படும். அவை சூரியனையும் சந்திரனையும் மறைக்கும் நிழல்கள்; இம்மறைப்பால் சூரியகிரகணம், சந்திர கிரகணம் உண்டாகின்றன. ஆகையால் உண்மையில் உள்ளது சப்த (ஏழு) கிரகங்களேயாகும்.

நமது உள்ளங்கையிலுள்ள 7 மேடுகளும் இந்த சப்த கிரகங்களைக் குறிக்கின்றன. மேலே கொடுத்திருக்கும் படத்தில் காண்க.

இந்த நவக்கிரகங்களே மக்களின் வினைகளை அடக்கி ஆள்கின்ற கடவுளர்களாகும் (Planetary Logoi).

“ சூரியன், சோமன், செவ்வாய்
சொற்புதன், வியாழன், வெள்ளி
சனியொடு இராகு கேது
கடவுள் ஒன்பனாராம் ”

என்பது சோதிட நூல்.

ஒரு மனிதனின் வாழ்நாள் இந்த நவக்கிரகங்களின் ஆதிக்கத்தில் (தசையில்) கட்டுப்பட்டுள்ளன. அவை வருமாறு :—

1. சூரியதசை	6	வருடங்கள்	7. சனிதசை	19	வருடங்கள்
2. சந்திரதசை	10	,,	8. இராகு ,,	18	,,
3. செவ்வாய்தசை	7	,,	9. கேது ,,	7	,,
4. புதன்தசை	17	,,		——	
5. குருதசை	16	,,	மொத்தம்	120	வருடங்கள்
6. சுக்கிரதசை	20	,,		——	

ஒரு காலச்சக்கரம் 60 வருடங்களாகும். ஒரு மனிதனின் நிறை ஆயுள் இரண்டு காலச்சக்கரங்கள் அதாவது 120 வருடங்களாம். தாந்திரிக எண் சாத்திரப்படி 6 ஒரு கேந்திர மறை எண்ணுகும் (Mystic Number).


இந்த நவக்கிரகங்கள் ஒவ்வொன்றும் ஒரு தனிச் சிறப்புப் பலனை மக்களுக்குக் கொடுக்கின்றது. அவை வருமாறு :

1. சூரியன் = பிதிர்காரகன்
2. சந்திரன் = மாதுர்காரகன்
3. செவ்வாய் = சகோதரகாரகன்
4. புதன் = . வித்தியாகாரகன்
5. குரு = புத்திரகாரகன்
6. சுக்கிரன் = களத்திரகாரகன்
7. சனி = ஆயுள்காரகன்
8. இராகு = ஞானகாரகன்
9. கேது = ஞானகாரகன்

(காரகன் என்ருல் செய்வோன்)

இந்த சப்த கிரகங்களும் இராசி மண்டலத்தில் குடிகொண்டுள்ளன. சூரியன் சந்திரன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களுக்கும் தனித்தனி ஒரு வீடும், மற்ற ஐந்து கிரகங்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு வீடுகளுமாக இருக்கின்றன. சூரியனுக்கு சிம்ம இராசியும்; சந்திரனுக்கு கடகமும்; செவ்வாய்க்கு மேஷமும் விருச்சிகமும்; புதனுக்கு மிதுனமும், கன்னியும்; குருவுக்கு மீனமும் தனுசும்; சுக்கிரனுக்கு ரிஷபமும், துலாமும்; சனிக்கு மகரமும் கும்பமும் சொந்த வீடுகளாகும். இதை 26-ம் பக்கத்தில் கொடுத்திருக்கும் படத்தில் காணலாம்.

நமது உள்ளங்கையிலுள்ள இரேகைகள் ஒவ்வொன்றும் நவக்கிரகங்கள் ஒவ்வொன்றின் செல்வாக்கையும், பலன்களையும் குறிக்கின்றன. அவற்றைக் கீழே கொடுத்துள்ள படத்தில் காண்க.



கைரேகைகளும் நவக்கிரகங்களும்

உள்ளங்கையிலுள்ள நவக்கிரக மேடுகளும், அவற்றின் பல் வேறு இரேகைகளும் அம்மனிதன்மேல் நவக்கிரகங்களுக்குள்ள ஆதிக்கத்தையும் செல்வாக்கையும் காட்டுகின்றன. சாயா கிரகங்களாகிய ராகு கேதுக்களுக்கு இராசி மண்டலத்தில் வீடுகள் இல்லாதது போன்று, உள்ளங்கையிலும் இந்த இரண்டு கிரகங்களுக்கும் மேடுகள் கிடையாது; மற்ற ஏழு கிரகங்களுக்கும் மேடுகள் உண்டு ஒவ்வொரு கிரகத்தின் ஆதிக்கம், செல் வாக்கு என்ன என்பதை மேலே ''காரகன்'' என்ற தலைப்பில்

பார்த்தோம். இப்போது இந்த கிரகங்களுக்கு இச்சக்திகள் எங்கிருந்து எப்படி வந்தன எனபதைப் பார்ப்போம்.

ஒரு முப்பட்டை (Prism) கண்ணாடியின் மூலமாக வெண்ணிற சூரியக் கதிர் செல்லும்போது அவ்வெண்ணிறக் கதிர் மறுபக்கத்தில் வரும்போது ஏழுவித நிறமுள்ள ஒளிக் கதிராக விரிந்து விசிரிம்பிப்பதை நாம கண்கூடாகக் காண்கின்றோம். ஆகாயத்தில் தோன்றும் வான வில்லும் அவ்வாறே காட்சியளிக்கின்றது. அதுபோல் ஏகனுகிய சிவததிலிருந்து கிளர்ந்தெழும் ஆதிசத்தியும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற சிவனின் மும்முகத்தினூடு சென்று வெளிப்படும்போது அது சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, மாயாசத்தி, குண்டலினி சததியென ஏழு சத்திகளாக (Seven Rays)ப் பிரிந்து வெளிப்படுகினறன. வெளிப்பட்ட இவைகள் இந்த ஏழு கிரகங்கள் (Seven Planetary Logoi) மூலம் பிரபஞ்சத்தில் பெருக்கெடுத்துப் பாய்ந்து ஓடுகின்றன.

அந்த சக்திப் பிரவாகத்தை மண்டலத்திலுள்ள மரீசி, வசிஷ்டர், ஆங்கீரசர், அத்திரி, புலஸ்தியர், பாலகர், கிருது ஆகிய சப்த மகரிஷிகளும் தாங்கி, அண்டத்திலும், பிண்டமாகிய நமது உலகிலுள்ள அகத்தியர், காசிபர், கௌதமர், மார்க்கண்டர், காசிபர், ஜமதக்னி, பரத்வாஜர் ஆகிய சப்த ரிஷிகளும் தாங்கி இவ்வுலகத்திலும் பஞ்சகிருத்திய காரியங்களுக்காகச் செலுத்தி நடத்துகின்றனர்.

இவ்வாறு பரமேஸ்வரனிடமிருந்து பெருக்கெடுத்துப் பாயும இந்த சப்த சக்திப் பிரவாகம் (Seven Rays) கிரகங்கள் மூலமாகவும சப்த ரிஷிகள் மூலமாகவும் நமது உலகில் பாய்ந்து, பரவி, சகல சராசரங்களையும் வியாபித்து நிற்கின்றன. ஆதலால் உலகிலுள்ள மண், கல், புல்பூண்டு, செடிகொடி மரம், பறவைகள், விலங்குகள், மனிதர் என்ற எல்லா சராசர சீவர்களும இந்த ஏழு சக்திகளின் ஒவ்வொன்றின் ஆதிக்கத்தின்கீழ் வருகின்றன. எழுவகைப் பிறவிகள், எழுவகை வர்ணங்கள், சப்த சுரங்கள், வாரங்கள், எண்கள் எல்லாம் இந்த சப்த சக்தி (Seven Rays) களின் கீழ் அடங்கும். இந்த ஏழு பிரவாகத்தின் கீழ் வரும் மக்களை சப்தரிஷி கோத்திரம் அதாவது ஒவ்வொரு இனத்தார் ஒரு ரிஷிகோத்திரத்தை சேர்ந்தவர்கள் என்பர்.

சகல சராசரங்கள் ஒவ்வொன்றும் ஏழு இனமாகப் பிரிக்கப் பெற்று ஒவ்வொன்றும் ஒரு கோத்திரத்தின்கீழ் (கிரணம்-Ray)-ஒரு சக்திப்பிரவாகத்தின்கீழ் வருகின்றது. இந்தக் கோத்திரங்கள் பொதுவாக சிவகோத்திரம், விஷ்ணு கோத்திரம், பிரம்ம கோத்திரம் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். பிரம்ம கோத்திரம் ஐந்து கிளைகளையுடையது. இந்த சப்தப் பிரவாகத்தை (Seven Rays)ப் பற்றிய விஷயம் ஒரு பெரும் சிக்கலான விஷயமாகும். இங்கு விரிக்கிற் பெருகுமாதலால் ஆர்வமுள்ளவர்கள் பிரம்மஞான சங்க நூல்களைப் பார்க்கவும்.

தக்ஷிணாமூர்த்தி தமது வலது கையால் சின்முத்திரைக் குறி மூலம் சிவஞானத்தைக் குறிப்பாக சனகாதி முனிவர் நால்வருக்கும் போதிக்கும்போது அவரது இடது கையில் பிடித்திருப்பது "சிவஞான போதச் சுவடி"யாகும். அச்சிவஞானப்போதப் பொருளை என்னால் வெளியிடப்பெற்ற "மெய்கண்டார் சிவஞான போதம் - மறைபொருள் விளக்கம்" என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

உள்ளங்கையிலுள்ள மேடுகளும், பல்வேறு இரேகைகளும், விரல்களின் அமைப்பும் எதைக் காட்டுகின்றன வென்றால் ஒரு மனிதனின் சென்றகால ஜென்மங்கள், இந்த ஜென்மம், இனி வரப்போகும் ஜென்மங்களின் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும், அவனின் சஞ்சிதம், பிராரத்வம், ஆகாமியம் ஆகிய மூவினைகளையும், அவ்வினைகளாலான பலா பலன்களையும் தம்முள் பொதிந்து வைத்துள்ளன. இதைத்தான் இரேகை சாத்திரம் என்பது.

இவ்வாறு தக்ஷிணாமூர்த்தியின் சின்முத்திரைக் குறி என்ன போதிக்கிறதென்பதை சுருக்கமாகக் காண்போமாக:—

அநாதி நித்தியப் பொருள்களாகிய பதி, பசு, பாசம் மூன்றும் ஒவ்வொன்றும் முப்பகுதிகளையுடையன வென்றும், பசுக்கள் ஆணவத்தோடு அத்துவிதமாய் சேர்ந்து சுழுத்தி போலிருக்கும் நிலையை கேவலாவத்தை யென்றும்; மாயையாலாகிய தனு, கரண, புவன போகங்களோடு சேர்ந்து நல்வினை தீவினைகளில் உழல்வதை சகலாவத்தை யென்றும்; பாசங்களினின்றும் விடுபட்டுப் பதியோடு அத்துவிதமாய்ப் பேரானந்தத்திலிருக்கும் நிலையை சுத்தாவத்தை என்றும் குறிக்கின்றது.

ஆணவத்தில் ஆழ்ந்திருந்த ஆன்மாக்களை ஈடேற்றுவதற்காகவே சர்வேஸ்வரன் தனு, கரண, புவன, போகங்களை நமக்குக் கொடுத்து இப்பிரபஞ்சமாகிய பள்ளியில் நம்மை விடுத்துள்ளான். இப்பிரபஞ்சம் எப்படி தோன்றிற்றென்பதைத்தான் இந்த சின்முத்திரைக் குறி குறிப்பாக உணர்த்தி நிற்கின்றது. அஃது எப்படி என்பதைக் காண்போம்:—

1. ஆதியந்தமற்றதும், பிறப்பிறப்பற்றதும், மனோவாக்குக் காயங்கட்கு அப்பாற்பட்டதுமான அகண்டாகார பரவஸ்து ஒன்று உள்ளது. அதை சிவம் என்றும், பிரம்மம் என்றும் கூறுவர்.

2 அப்பரவஸ்துவினின்றும் "ஓம்" என்ற நாதம் எழுந்தது. அதை பிரணவ சொருபமான நாதப்பிரம்மம் என்பர்.

3. அதனின்றும் அர்த்தநாரீஸ்வர வடிவான சிவனும் சத்தியும் (விந்து) தோன்றினர்.

இந்த சிவன், சத்தி, நாதம், விந்து நான்கையும் பரம் பொருளின் அருவநிலை சொருபம் என்பர்.

4 அதினின்றும் சாக்கிரம். சொர்ப்பனம், சுழுத்தி, துரியம் என்ற நான்கு அவத்தையுடன் முறையே வைஸ்வாரனன், தைஜஸன், பிராஞ்ஞன், ஈஸ்வரன் என்ற அபிமான நாமத்துடன் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் என்ற நான்கு உருவத்திருமேனி மூர்த்திகளும் விந்துவிலிருந்து நான்கு வாக்குகளும் தோன்றின.

5. இடையில் ஈசானம், அகோரம், தத்புருஷம், வாமதேவம், சத்யோஜதம் ஆகிய ஐம்முகத்தோடு அருவுருவத் திருமேனியாகிய சதாசிவம் தோன்றிற்று.

அவற்றுடன், பரமாத்மாவின் அம்ஸமாக புருடன் தோன்றினன். இவனுக்குக் கூடஸ்தன் (Monad) என்றும், அதன் சாயலுக்குப் பிரத்தியேகாத்மா, (Eego) என்றும், அதன் சாயலுக்குச் சீவாத்தமா (Personality) என்றும் பெயர்.

6 ஆதிசத்தியினின்றும் சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, மாயா சத்திகள் தோன்றின.

7. இவை சிவதத்துவம் 5, வித்தியாதத்துதம் 7, ஆன்மதத்துவம் 24 ஆக 36 தத்துவங்களின் தோற்றத்தைக் குறித்து நின்றன.

8. பின் ஈஸ்வரனின் சிருஷ்டி சங்கற்பமாகிய மனோ தத்துவத் தோற்றம் கூறப்பட்டுள்ளது.

9. பிரபஞ்ச உற்பத்திக்குக் கருத்தாக்களாகிய நவப்பிரஜா பதிகள் தோற்றமும், நவக்கிரகங்கள் தோற்றமும் கூறப்பட்டது.

10. பின் பிரபஞ்சத்தை உள்ளடக்கி நிற்கும் அஷ்டதிக்கு களையும், மேல் கீழ் திசைகள் ஆக பத்து திசைகள் கூறப்பட்டன.

11. மேலுலகம் ஏழு, கீழ் உலகம் ஏழு ஆக 14 உலகங் களின் தோற்றம் கூறப்பட்டுள்ளது.

12. கடைசியாக பிரபஞ்சப் படைப்புக்கு முதற்காரண மான மூலப் பிரகிருதி மாயையினின்று தோன்றிய பஞ்சபூதங் களும், அவற்றின் பஞ்சீகரணமும் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அண்டமாகிய பிரபஞ்ச சிருஷ்டியையும், பிண்ட மாகிய நமது உலக சிருஷ்டியையும் கூறி, மேலும் இவற்றின் அண்டசராசரங்களின் மேல் நவக்கிரகங்களுக்குள்ள ஆதிக்கத் தையும், செல்வாக்கையும் குறியா நின்றது தக்ஷிணாமூர்த்தியின் சின்முத்திரை. அண்டத்திலும் பிண்டத்திலும் (உலகில்) ஈஸ்வரனின் ஆணையை மேற்கொண்டு பஞ்சகிருத்தியங்களைக் கொண்டு செலுத்துபவர்கள் திருச்சிற்றம்பலத்தின் சப்த மகரிஷிகளின் திருக்கூட்டங்களாம்.

எவ்வாறு ஒருவனுடைய சென்றகால, நிகழ்கால, வருங்கால ஜென்மங்களின் நிகழ்ச்சிகள் முற்றும் அவனின் கைரேகைகளில் பொதிந்துள்ளனவோ அவ்வாறே பிரபஞ்சங்களின் தோற்றம் முதல் ஒடுக்கம் வரையிலான உள்ள வரலாறுகளின் எல்லா அம்சங்களும் சர்வேஸ்வரனுடைய சங்கல்பத்தில் நிர்ணயிக்கப் பெற்றுள்ளன. அவருடைய பிரஞ்ஞையைத் தொட்டு உணரக் கூடிய மகரிஷிகள் முக்கால நிகழ்ச்சிகளையும், வரலாறுகளை யும் அறியக்கூடும்.

திருச்சிற்றம்பலம்

வள்ளலார் அடிகளே சரணம்

APPENDIX

Extracts from "Man : Whence, How & Whither and The Masters and the Path

Sanat Kumar, the KING & Lord of Our World

Our world is governed by a spiritual KING - One of the Lords of the Flame who came long ago from venus. He is called by the Hindus "Sanat Kumara" the Eternal Youth of sixteen summers also known as the Lord of the world and the supreme Ruler. He represents the Logos (Ishwara) as far as this world is concerned and directs the whole of its evolution not only of humanity but also the evolution of Devas, the nature spirits and all other creatures connected with the earth. In His hand and within His actual aura lies the whole of his planet.

Those who have met Him face to face speak of him as in appearance a handsome youth, dignified, benignant beyond all description, yet with a mien of omniscient, inscrutable majesty, conveying such a sense of resistless power that some have found themselves unable to bear his gaze, and have veiled their faces in awe. Thus did the founder of the Theosophical Society, Madams Blavatsky.

During each world-petiod, we are told, there are three successive Lords of the world, and the present holder of the office is already the third. He resides with his three pupils (Sanaka, Sanandana and Sanadhana) in an oasis in the Gobi desert called Shamballa, often spoken as the Sacred Island, in remembrance of the time when it was an island in the Central Asian Sea. These four greatest of the Adepts are often called "The Children of the Fire-Mist".

Their bodies though human in appearance, differ widely from ours in constitution since they are artificial and their particles do not change as do those of the human frame. They require no nourishment, and remain unchanged through thousands of years.

The Present Third Lord of the world, after having fulfilled his duty, hands over his charge to one of his three deciples, takes

another initiation (10th Initiation) entirely outside of our world and its Hierarchy, and attains the level of the Silent Watcher.

Rod of Power of the KING

This wonderful sceptre symbolises in some way a physical centre or fulcrum for the forces poured forth by the Logos and was magnetized by Him millions of years ago, when first he set the human Life-wave in motion round our globes, We are told that it is the physical sign of the concentration of the attention of the Logos and that it is carried from planet to planet as that attention shifts-that where it is, that is for moment the central theatre of evolution, and that when it leaves this planet for the next, our earth will sink into comparative inertia. It is kept usually in the custody of the Lord of the World at Shamballa. It is a round bar of the lost metal Orichalcum, perhaps two feet in length and about two inches in diameter, having at each end a huge diamond shaped into a ball with a cone projecting from it, It has the strange appearance of being always surrounded by fire of having an aura of brilliant yet transparent flame. (In Hinduism called VEL.)

THE COMING OF THE LORDS OF THE FLAME

The great Lemurian Polar Star was still perfect, and the huge Crescent still stretched along the equator, including Madagascar. The sea which occupied what is now the Gobi Desert still broke against the rocky barriers of the northern Himalayan slopes, and all was being prepared for the most dramatic moment in the History of the Earth—the Coming of the LORDS OF THE FLAME.

A great astrological event, when a very special collocation of planets occurred and the magnetic condition of the Earth was the most favourable possible, was chosen as the time. It was about six and a half million years ago. Nothing more remained to be done, save what only They could do.

Then, with the mighty roar of swift descent from incalculable heights, surrounded by blazing masses of fire which filled the sky with shooting tongues of flame, flashed through the aerial spaces the chariot of the Sons of the Fire, the Lords of the Flame from Venus; it halted, hovering over the 'White Island' which lay smiling in the bosom of the Gobi Sea; green was it, and radiant

with masses of fragrant many coloured blossoms, Earth offering her best and fairest to welc me her coming king. There He stood, "the Youth of sixteen summers", SANAT KUMARA, the "Eternal Virgin-Youth", the new Ruler of Earth, come to His kingdom, His pupils, the three Kumaras with Him; His Helpers around Him; thirty mighty Beings were there, great beyond Earth's reckoning, though in graded order, clothed in the glorious bod es They had created by Kriyashakti, the first occult Hierarchy, branches of the one spreading Banyan-Tree, the nursery of future Adepts, the centre of all occult life. Their dwelling place was and is the Imperishable Sacred Land, on which ever shines down the Blazing Star, the symbol of Earth's Monarch, the Changeless Pole round which the life of our Earth is ever spinning.

—Annie Besant & Leadheater

அருவமும் உருவு மாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும், கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.


—கந்தபுராணம்

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	6	(Title page) அவதாரம	அவதாரம்
3	13	Inspeetor	Inspector
18	12	மார்த்தை	மார்க்கத்தை
19	4	சமஹரித்து	சம்ஹரித்து
26	5	கடகம	கடகம்
26	7	கன்னி	கன்னி
30	27	ஞானசத்திக்குமுன் இச்சாசத்தி சேர்க்க	
32	22	சிருஷ்டிகனையும்	சிருஷ்டிகளையும்
38	28	Eego	Ego
40	24	Calied	Called

ஆசிரியர் வெளியிட்டிருக்கும் நூல்கள்

(1) சிவஞான போதம் மறைபொருள் விளக்கம்
(2) பாவைபெம்பாவையும் டள்ளியெழுச்சியும்
(3) கூட்டுப் பிரார்த்தனைப் பாமாலை
(4) வள்ளலாரும் வேதாந்தமும்
(5) திருச்சிற்றமபலம் என்ற அவனியின்
அந்தரங்க அருளரசு



சின்முத்திரை - ஞானக்குறி — CHIN MUDHRA
SYMBOL of DIVINE WISDOM

ஆசிரியர் வெளியிட இருக்கும் நூல்கள்

(6) வள்ளலாரும் பிரம்ம ஞான சங்கமும்
(7) வள்ளலாரும் சித்தாந்தமும்
(8) தேகம் தேகி அல்லது உயிர் மெய் உபாதிகள்
(9) ஞான சாதனங்களும் தீட்சாப் படிகளும்
(10) விஞ்ஞான மெய்ஞ்ஞான ஒளியில் கந்தபுராணம்